13.08.2026
O.S.No. 99/2018
P.W. 1 – பால்ராஜ்

**சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் :**

1. நீங்கள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றாலும் உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும், ஆக்கிரமிப்பு என்று சொன்னார்கள் அதற்காகவும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எத்தனை சொத்துக்களுக்கு உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளீர்கள் என்றால் சர்வே எண்.111/12A, 111/12B ஆகிய இரண்டு சொத்துக்களுக்கு கேட்டுள்ளேன். சர்வே எண்.111/12Aக்கு யார் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் எனது தாயாரான குஞ்சரம் (எ) நல்லம்மாள் பெயரில் உள்ளது. தற்போது சர்வே எண்.111/12Bக்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் பாரதிராஜா பெயரில் உள்ளது. பிரதிவாதியிடமிருந்து அறிவிப்பு வந்ததாலும், வருவாய் துறையிலிருந்து அளவீடு செய்ய வருவதாக தெவித்ததாலும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளததாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை அளவீடு நீங்கள் தனிப்பட்ட முறையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களை நீங்கள் அனுபவம் செய்து வருகிறீர்கள் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. உங்கள் வழக்குரையில் கடந்த 25.08.2018ம் தேதி பிரதிவாதி ஆக்கிரமிப்பு பிரஸ்தாபித்ததாக தெரிவித்து இவ்வழக்கை தாக்ல செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த ஆக்கிரமிப்பு பகுதி தாவா

B. பால்ராஜ்

சொத்தின் மேற்கு பக்கம் இருப்பதாக தெரிவித்து தான் இவ்வழக்கை தாக்்ல செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். தாவாசொத்து ஆக்கிரமிப்பு சம்பந்தமாக காவல் நிலையத்தில் எந்த புகார் மனுவும் கொடுக்கவிலலை என்றால் சரிதான். இதுகுறித்து ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து கூட்டவில்லை என்றால் சரிதான். இந்த வழககின் பிரதிவாதி சேவுகப்பெருமாள் வாதியாக இருந்து உங்கள் மீது இந்நீதிமன்றத்தில் O.S. No.2/2019 வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு உங்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சர்வே அளவின்படி தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளவீடு செய்தார் என்றால் சரிதான், கல் இல்லாமல் அளவீடு செய்தார். அந்த நீதிமன்ற ஆணையர் அறிக்கையை பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். ஆணையர் அறிக்கையுடன் வரைபடமும் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த ஆணையர் வரைபடத்தை பார்த்தீர்களா என்றால் பார்த்தேன்.

3. அந்த ஆணையர் வரைபடத்தில் எவ்வளவு பகுதி ஆக்கிரமிப்பு என குறிப்பிட்டுள்ளார் என்றால் தெரியாது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம், செண்டு கணக்கு அளவீடு, ஏர்ஸ் கணக்கில் அளவீடு என்று உங்கள் வழக்குரையில் பிரித்து காட்டவில்லை என்றால் சரியல்ல, காட்டியுள்ளேன். அவ்வாறு பிரித்து எந்த அளவும் காட்டவில்லை என்றாலும், வழக்கிற்காக காட்டியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து உங்களுக்கு எப்படி பாத்தியம் என்றால்

ஆண்டு ஆண்டு காலமாக அனுபவம் செய்து வருகிறோம். தாவா சொத்துக்கான நில உடமை பதிவேடு ஆவணம் பார்த்துள்ளீர்களா என்றால் பார்த்துள்ளேன். அதில் தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. நீங்கள் பிரதிவாதி இடத்தை ஆக்கிரமித்துவிட்டு அதனை மறைப்பதற்காகவும், வருவாய்துறையில் இருந்து அளவீடு செய்ய வருவதை தடுப்பதற்காகவும் பிரதிவாதியை அலைக்கழிக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் இவ்வழக்கை தாக்ல செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. தாவா இரண்டு சொத்துக்களும் உங்கள் பெயரில் இல்லாதபோது நீங்கள் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல, எனது தகப்பனாருக்கு வயது ஆகிவிட்டதால் சொத்துக்களை என்னையும் எனது மகனையும் அனுபவித்து கொள்ளுங்கள் என வாய்மொழியாக சொன்னார். நீங்கள் தாவா சொத்துக்களை அனுபவம் செய்து வருகீறீர்கள் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யாததால் நீங்கள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல, ஆவணம் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நீங்கள் கோரியுள்ள பரிகாரம் உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் உங்கள் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

B. பாலாஜி

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் விசாரணை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

REVATHI SUBBIAH Digitally signed by REVATHI SUBBIAH Date: 2026.08.13 16:45:42 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாடானை.